நவம்பர் 2019

விண்மீன்.காம்

# நான்காவது வார நடப்பு நிகழ்வுகள்

22 நவம்பர் – 30 நவம்பர்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1. "அருண் பூமி" என்னும் மாநிலத்தின் முதல் ஹிந்தி நாளேடைத் தொடங்கியுள்ள இந்திய மாநிலம் எது?**

**A)** அருணாச்சல பிரதேசம் ☑

B) நாகாலாந்து

C) திரிபுரா

D) மிசோரம்



✓ அருணாச்சல பிரதேச முதலமைச்சர் பேமா கந்து, மாநிலத்தின் முதல் ஹிந்தி நாளிதழான 'அருண் பூமி'யை வெளியிட்டுள்ளார். இதனை தக்கம் சோனியா தொகுத்து வெளியிடுவார். இதன்மூலம், நாட்டின் பெரும்பான்மையான ஹிந்தி மொழி பேசும் மற்றும் படிக்கும் மக்கள், அருணாச்சல பிரதேச மாநிலத்தைப் பற்றிய செய்திகள், தகவல்கள் மற்றும் அறிவை எளிதாக பெறமுடியும்.

**2. உலக எரிசக்தி கண்ணோட்டத்தை (WEO–2019) வெளியிட்டுள்ள சர்வதேச அமைப்பு எது?**

A) IMF

B) WHO

**C)** IEA ☑

D) WB

✓ சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA) அண்மையில் தனது உலக எரிசக்தி கண்ணோட்ட (WEO) அறிக்கையை வெளியிட்டது. நடப்பாண்டு (2019) பதிப்பில், 2040ஆம் ஆண்டளவில் நிறுவப்பட்ட மொத்த சூரிய ஆற்றல் உற்பத்தித் திறனானது 495 ஜிகாவாட்டிலிருந்து 3,142 ஜிகாவாட்டாக மாறும் என IEA கணித்துள்ளது. இருப்பினும், காலநிலை மாற்றம் சார்ந்த கொள்கைகளில் அதிக கவனம் செலுத்தாவிட்டால், $CO_2$ உமிழ்வானது தொடர்ந்து உயரும் என IEA எதிர்பார்க்கிறது.

✓ நீண்ட காலத்திற்குத் தேவையான இருப்பைக் கொண்டுள்ள நிலக்கரி ஆலைகளே இதற்கு முதன்மை காரணமாகும். இது மொத்த உமிழ்வுகளில் 30 சதவீதத்துக்கு காரணமாக அமைந்துள்ளது. IEA என்பது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD) கட்டமைப்பில் நிறுவப்பட்ட அரசுக்கு இடையிலான ஓர் அமைப்பாகும்.

**3. நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஐ அடைதல் – மருத்துவ தயாரிப்புகளுக்கான அணுகல் குறித்த 2019 உலக மாநாட்டை புது தில்லியில் ஏற்பாடுசெய்த பன்னாட்டு அமைப்பு எது?**

**A)** WHO ☑

B) UNICEF

C) UNESCO

D) IMF

✓ நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஐ அடைதல் – மருத்துவ தயாரிப்புகளுக்கான அணுகல் குறித்த நடப்பாண்டு (2019) உலக மாநாடானது நவ.19–21 வரை புது தில்லியில் நடந்தது. இதனை மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகமும் உலக நலவாழ்வு அமைப்பும் (WHO) இணைந்து நடத்தின. நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) – 2030 நிகழ்ச்சி நிரலை அடைவதற்காக, முக்கியத்துவம் வாய்ந்த பொதுநலவாழ்விற்கான சட்டபூர்வ மற்றும் வர்த்தக சூழலை உருவாக்குவதை மையமாகக்கொண்ட கலந்துரையாடல்களுக்கு இந்த மாநாடு ஒரு வாய்ப்பினை நல்கியது.

**4. நடப்பாண்டு (2019) அமைதி, ஆயுத ஒழிப்பு மற்றும் மேம்பாட்டுக்கான இந்திரா காந்தி பரிசு, யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**

A) ஏஞ்சலா மெர்க்கல்

B) எலன் ஜான்சன் சர்லீப்

**C) டேவிட் அட்டன்பரோ ☑**

D) எலா பட்



✓ புகழ்பெற்ற இயற்கை ஆர்வலரும் ஒலிபரப்பாளருமான சர் டேவிட் அட்டன்பரோ, நடப்பாண்டின் (2019) அமைதி, ஆயுத ஒழிப்பு மற்றும் மேம்பாட்டுக்கான இந்திரா காந்தி பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இயற்கை உலகின் அதிசயங்களை வேறெந்த தனிநபரை விடவும் நமக்கு காண்பிப்பதற்காக வாழ்நாள் முழுவதும் அவராற்றிய பணிகளுக்காக அவர் இந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

**5. நடப்பாண்டு (2019) தெற்காசிய பாதுகாப்பு உச்சிமாநாட்டை ஏற்பாடுசெய்த தொழில்நுட்ப நிறுவனம் எது?**

A) மைக்ரோசாப்ட்

**B) பேஸ்புக் ☑**

C) டுவிட்டர்

D) இன்போசிஸ்

✓ தனிநபர்களும் சமூகங்களும் இணைய உலகில் இணைக்கப்பட்டுள்ள இந்தக் காலத்தில், பாதுகாப்பு தொடர்பான சிக்கலை முன்னிலைப்படுத்துவதற்காக தெற்காசிய பாதுகாப்பு உச்சிமாநாடு–2019இன் 2ஆவது பதிப்பு புது தில்லியில் நடைபெற்றது. இதை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமும் பேஸ்புக் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்தன. இவ்வுச்சிமாநாட்டின்போது, மத்திய அமைச்சர் ஸ்மிருதி ஜூபின் இரானி "We think Digital" என்ற வலைத்தளத்தை தொடங்கிவைத்தார்.

✓ இந்த வலைத்தளமானது டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்த, புரிந்துகொள்ள, மதிப்பீடு செய்ய, தொடர்புகொள்ள மற்றும் அவற்றை உருவாக்குவதற்கான அறிவைக்கொண்ட மாணாக்கர்களை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட நான்கு பகுதிகளைக்கொண்ட ஒரு பாடத்திட்டமாகும். இது, ஆன்லைன் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் போலித்தகவல்களில் கவனம் செலுத்தும்.

**6.இந்தியாவுக்கும் எந்த நாட்டுக்கும் இடையே முதல்முறையாக இளஞ்சிவப்புப்பந்து டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது?**



A) தென்னாப்பிரிக்கா

**B) வங்கதேசம் ☑**

C) நியூசிலாந்து

D) இங்கிலாந்து

✓ இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையிலான முதல் இளஞ்சிவப்புப் பந்து டெஸ்ட் போட்டியானது நவ.22 அன்று கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டனில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியின்போது, விளக்கொளியின்கீழ் சிறந்த கட்புலனாகுதன்மைக்காக சிவப்புப்பந்துகளுக்கு மாற்றாக இளஞ்சிவப்பு பந்துகள் பயன்படுத்தப்படும். BCCI தலைவர் சௌரவ் கங்குலி, 'பிங்கு–டிங்கு' நிகழ்வின் அதிகாரப்பூர்வ சின்னங்களை வெளியிட்டார். இது, வங்கதேசத்துக்கு எதிரான இந்தியாவின் முதலாவது பகல்–இரவு டெஸ்ட் போட்டியாகும்.

**7.மீனவர்களுக்காக YSR மத்ஸ்யகரா பரோசா திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**




A) தமிழ்நாடு

B) மேற்கு வங்கம்

**C) ஆந்திர பிரதேசம் ☑**

D) கேரளா

✓ உலக மீனவர் நாளை முன்னிட்டு, ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சர் Y S ஜெகன் மோகன் ரெட்டி, மீனவர்களுக்காக, 'YSR மத்ஸ்யகர பரோசா' என்ற நலத்திட்டத்தை தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தின்கீழ், 21–60 வயதுக்குட்பட்ட 1,32,332 மீனவர்களுக்கு, ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் வரும் மீன்பிடிதடை காலகட்டத்தின்போது நிவாரண நிதியாக தலா ₹10,000 பணம் கிடைக்கும். மேலும், டீசலுக்கான மானியம், லிட்டருக்கு 6.03 ரூபாயிலிருந்து 9 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இது எந்திரமயமாக்கப்பட்ட (3000 லிட்டர்கள்) மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளுக்கு (300 லிட்டர்கள்) பொருந்தும்.

**8.உலகின் முதல் இஸ்லாம் யோகா முகாமை நடத்துகிற நாடு எது?**



**A) இந்தியா ☑**

B) இஸ்ரேல்

C) வங்கதேசம்

D) சீனா

✓ உலகின் முதல் இஸ்லாம் யோகா முகாமானது நவ.20 அன்று உத்தரகண்ட் மாநிலத்தின் கோத்வார் நகரத்தில் உள்ள கன்வா ஆசிரமத்தில் தொடங்கியது. இது வரும் நவம்பர் 24 அன்று நிறைவடையும்.

✓ இந்நிகழ்ச்சியில், பல்வேறு நாடுகளைச்சேர்ந்த சுமார் ஐந்நூறு இசுலாமிய ஆண்களும் பெண்களும் பங்கேற்கின்றனர். யோகா ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்ததல்ல, அது முழு மனிதகுலத்திற்கும் நன்மைபயக்கும் ஒன்று என்று உலகிற்கு உணர்த்துவதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

**9.எந்தத் தேதியில், உலக தொலைக்காட்சி நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?**

A) நவம்பர் 22

B) நவம்பர் 20

**C) நவம்பர் 21 ☑**

D) நவம்பர் 23



✓ ஒளிபரப்பு ஊடகங்களின் பங்கை ஒப்புக்கொள்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.21 அன்று உலகம் முழுவதும் உலக தொலைக்காட்சி நாள் அனுசரிக்கப்படுகிறது. சமூக ஊடகங்களில் பதியப்படும் தகவல்களின் உண்மைத்தன்மை கேள்விக்குறியாக இருக்கும் இந்தக்காலத்தில், ஒருபக்கச்சார்பற்ற தகவல்களை வழங்கும் அரசாங்கம், செய்திநிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் அர்ப்பணிப்பையும் இந்தநாள் போற்றுகிறது.

**10.எந்தத் தேதியில், உலக மீனவர் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?**

A) நவம்பர் 22

B) நவம்பர் 20

**C) நவம்பர் 21 ☑**

D) நவம்பர் 23



✓ உலகம் முழுவதுமுள்ள மீனவ மக்களால் தங்களின் வாழ்வு செழிப்பதற்காக ஆண்டுதோறும் நவ.21 அன்று உலக மீனவர் நாள் கொண்டாடப்படுகிறது. உலகில் மீனவர்களின் முக்கியத்துவத்தை சிறப்பிக்கும் விதமாக பேரணி, பயிலரங்கம், பொதுக்கூட்டம், கலாசார நிகழ்வு, நாடகம், கண்காட்சி, இசைநிகழ்ச்சி மற்றும் செய்முறை விளக்கங்கள் ஆகியவற்றின் மூலம் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியப் பள்ளிகளின் டிஜிட்டல் உருமாற்றத்தை எளிதாக்குவதற்காக, 'K–12 கல்வி உருமாற்ற கட்டமைப்பை' அறிமுகப்படுத்தியுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

**A) மைக்ரோசாப்ட் ☑**

B) பேஸ்புக்

C) டுவிட்டர்

D) இன்போசிஸ்

✓ இந்தியப் பள்ளிகளின் டிஜிட்டல் உருமாற்றத்தை எளிதாக்குவதற்காக, மைக்ரோசாப்ட் தனது 'K–12 கல்வி உருமாற்ற கட்டமைப்பை' அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் கட்டமைப்பில் தலைமைத்துவம் & கொள்கை, நவீனமுறையில் கற்பித்தல் & கற்றல், நுண்ணறிவு சூழல்கள் & தொழில்நுட்ப வரைபடம் ஆகிய 4 தூண்கள் உள்ளன. இலட்சிய மாற்றத்தை அடைவதற்கான கருவிகள் & தொழில்நுட்பத்தை ஆற்றல்மிகு மற்றும் உற்பத்தி வழிகளில் சிந்தனையுடன் ஒருங்கிணைப்பதே இந்தக் கட்டமைப்பின் நோக்கமாகும்.

**2. மருத்துவ மற்றும் தொழிற்துறை நோக்கங்களுக்காக மாநிலத்தில் கஞ்சா சாகுபடியை சட்டப் பூர்வமாக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) ஹரியானா

B) கர்நாடகா

**C) மத்திய பிரதேசம் ☑**

D) பஞ்சாப்



✓ மருத்துவம் & தொழில்துறை நோக்கங்களுக்காக மாநிலத்தில் கஞ்சா சாகுபடியை சட்டப்பூர்வமாக்க மத்திய பிரதேச அரசு முடிவுசெய்துள்ளது. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அரசாங்கத்திற்கு மட்டுமே விற்கமுடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பது போன்ற மருத்துவ நோக்கங்களுக்காக சணல் (ஒரு வகை மரிஜுவானா) சாகுபடியை ம.பி அரசு அனுமதிக்கும். 0.3 முதல் 1.5% வரை டெட்ரா–ஹைட்ரோ–கன்னாபினோல் (THC) செறிவு கொண்ட சணலானது, இழை உற்பத்திபோன்ற தொழிற்துறை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

**3. 'Mr. யுனிவர்ஸ்–2019' என முடிசூட்டப்பட்ட முதல் இந்தியரான சித்தரேஷ் நடேசன், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

A) தமிழ்நாடு

B) கர்நாடகா

C) ஆந்திர பிரதேசம்

**D) கேரளா ☑**



- தென் கொரியாவின் தீவு நகரமான ஜெஜூவில் நடைபெற்ற 11ஆவது உலக உடற்கட்டமைப்பு மற்றும் உடற்கட்டு விளையாட்டு சாம்பியன்ஷிப்பில் (WBPF) 'Mr. யுனிவர்ஸ்–2019' என முடிசூட்டப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமையை கேரளாவைச்சேர்ந்த இந்திய உடற்கட்டுநர் சித்தரேஷ் நடேசன் பெற்றுள்ளார். WBPF–2019இல் 90 கிலோ பிரிவில் அவர் பட்டத்தை வென்றார்.
- முன்னதாக, அக்டோபரில் தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய உடற்கட்டமைப்பு மற்றும் உடற்கட்டு விளையாட்டு சாம்பியன்ஷிப்பில் (ABBF) 'மிஸ்டர் ஆசியா–2019' பட்டத்தையும் அவர் பெற்றார்.

**4.குவாட் (Quad) நாடுகளுக்கான பயங்கரவாத எதிர்ப்பு குறித்த முதல் கலந்தாலோசனையை நடத்திய இந்திய அமைப்பு எது?**

A) BSF

B) DRDO

**C) NIA ☑**

D) இந்திய இராணுவம்

- தேசிய புலனாய்வு அமைப்பானது (NIA) நவ.21&22 அன்று தில்லியில் உள்ள அதன் தலைமையகத்தில் குவாட் நாடுகளுக்கான பயங்கரவாத எதிர்ப்பு குறித்த முதல் கலந்தாலோசனையை (Counter Terrorism Table Top Exercise) நடத்தியது. அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகியவற்றை உள்ளடக்கியது குவாட் (Quad) நாடுகள் எனப்படுகிறது.
- NIAஇன் கூற்றுப்படி, வளர்ந்துவரும் பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கான பதிலளிப்பு வழிமுறைகளை மதிப்பீடுசெய்து சரிபார்ப்பதே இதன் நோக்கமாகும். சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதையும், பங்கேற்கும் நாடுகளிடையே மேம்பட்ட ஒத்துழைப்புக்கான பகுதிகளை ஆராய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5.வாரணாசியில், 'இலக்கு வடகிழக்கு' என்றவொன்றை நடத்தும் மத்திய அமைச்சகம் எது?**

A) உள்துறை அமைச்சகம்

**B) வடகிழக்குப் பகுதி வளர்ச்சி அமைச்சகம் ☑**

C) நிதி அமைச்சகம்

D) பாதுகாப்பு அமைச்சகம்

- 'Destination North East – இலக்கு வடகிழக்கு திருவிழா'வானது நவம்பர் 23 அன்று வடகிழக்குப்பகுதி வளர்ச்சி அமைச்சகத்தால் உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் நடத்தப்பட்டது. இந்த நான்கு நாள் திருவிழாவானது, வடகிழக்குப்பகுதியைச் சார்ந்த கலை, கலாசாரம், உணவு வகைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறிகளை காட்சிப்படுத்தியது.
- இந்தத் திருவிழாவின்போது வடகிழக்குப்பகுதியை சேர்ந்த கைவினைஞர்கள் மற்றும் கலைஞர்கள், பார்வையாளர்களுக்கு தங்களின் கைவினைப்பொருட்களை நேரடியாக செய்து காண்பித்தார்கள் மற்றும் தங்களது கலாசார நிகழ்வையும் நேரடியாக நிகழ்த்திக்காண்பித்தனர்.

**6.இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ICMR) வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட தொழிலதிபர் யார்?**

A) அசிம் பிரேம்ஜி

B) முகேஷ் அம்பானி

C) ரத்தன் டாடா

**D) கிரண் மஜூம்தார்–ஷா ☑**



- ✓ பயோகானின் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான கிரண் மஜூம்தார்–ஷா, இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ICMR) வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுள்ளார். சுகாதாரத்துறையில் சிறந்து விளங்கியதற்காகவும், சமூகத்திற்கு பெருமளவில் பங்களித்ததற்காகவும் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இந்திய அளவிலும்s உலக அளவிலும் பொதுமக்களுக்கு மலிவான உயிர்காக்கும் சிகிச்சைகளை வழங்கியதற்காகவும், அடிப்படை சுகாதாரத்துக்கான அணுகலை அதிகரித்ததற்காகவும் அவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். ICMRஇன் 108ஆவது நிறுவனநாளைக் கொண்டாடிய நிகழ்வில், நவம்பர் 17 அன்று புது தில்லியில் மஜூம்தார்–ஷாவுக்கு பில் கேட்ஸ் இந்த விருதை வழங்கினார்.

**7.ஹரியானாவின் எந்தக் கிராமத்தில், NuGen மொபிலிட்டி உச்சிமாநாடு–2019 நடைபெறுகிறது?**

A) பதேஸ்ரா

B) நாதுவாஸ்

C) சாந்தினி

**D) மானேசர் ☑**

- ✓ ஹரியானாவில், NuGen மொபிலிட்டி உச்சிமாநாட்டை, "Smart & Green Mobility" என்ற கருப்பொருளின் கீழ், மானேசரில் உள்ள சர்வதேச தானியங்கி தொழில்நுட்ப தொழில்நுட்ப மையம் ஏற்பாடுசெய்தது. வாகன உமிழ்வுகளிலிருந்து வெளிப்படும் மாசு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வாக, மாற்றுப் போக்குவ –ரத்துத் தீர்வுகளைக் கண்டறிவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8.எந்த நடுவணமைச்சகத்தின்கீழ், தேசிய சோவா ரிக்பா நிறுவனத்தை நிறுவுவதற்கு நடுவண் அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது?**

A) உள்துறை அமைச்சகம்

B) பழங்குடியினர் விவகார அமைச்சகம்

**C) AYUSH அமைச்சகம் ☑**

D) சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம்



- ✓ AYUSH அமைச்சகத்தின்கீழ், தன்னாட்சிமிக்க ஓர் அமைப்பாக லேவில் சோவா–ரிக்பாவுக்கான தேசிய நிறுவனத்தை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது. சோவா–ரிக்பா என்பது இந்தியாவில் இமயமலைப்பகுதியில் பின்பற்றப்பட்டு வரும் பாரம்பரிய மருத்துவ முறையாகும்.

- ✓ இது சிக்கிம், அருணாச்சல பிரதேசம், டார்ஜிலிங், ஹிமாச்சல பிரதேசம், யூனியன் பிரதேசமான இலடாக் மற்றும் தற்போது இந்தியா முழுவதும் பிரபலமாக நடைமுறையில் உள்ளது. இந்திய துணைக் கண்டத்தில் சோவா–ரிக்பாவின் மறுமலர்ச்சிக்கு இந்நிறுவனம் ஓர் ஊக்கத்தை வழங்கும். இது சோவா – ரிக்பாவை கற்கும் மாணவர்களுக்கு இந்தியாவில் மட்டுமின்றி, பிற நாடுகளிலிருந்தும் வாய்ப்புகளை பெற்றுத்தரும்.

**9.அண்மையில் காலமான நீல்காந்த் கதில்கர், எந்தத்துறையில் குறிப்பிடத்தக்கவராக இருந்தார்?**

A) நிழற்படம் எடுத்தல்

**B) இதழியல் ☑**

C) அரசியல்

D) கலை



- ✓ மராத்திய செய்தித்தாளான நவக்கலின் குறிப்பிடத்தக்க ஆசிரியரான நீல்காந்த் கதில்கர் (85), நவ.22 அன்று மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் காலமானார். "Practical Socialism: musings from a tour of Russia" உள்ளிட்ட பல்வேறு நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

**10.கடற்படை நடவடிக்கைகளில் சேர்ந்த இந்திய கடற்படையின் முதல் பெண் விமானியாக மாறியுள்ளவர் யார்?**

A) நிகிதா குப்தா

B) கோமல் சர்மா

C) திவ்ய குமாரி

**D) சிவாங்கி ☑**



- ✓ பெண் அதிகாரி துணை Lt. சிவாங்கி, இந்திய கடற்படையின் முதல் பெண் விமானியாக கடற்படை நடவடிக்கைகளில் சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. 2019 டிச.2 அன்று கேரளத்தின் கொச்சியில் உள்ள தெற்குக்கடற்படைப்பிரிவில் செயல்பாட்டு பயிற்சி முடிந்ததும் அவர் கடற்படை நடவடிக்கைகளில் சேருவார். பீகார் மாநிலத்தின் முசாபர்பூரைச் சேர்ந்த இவர், அங்குள்ள DAV பொதுப்பள்ளியில் அவரது பள்ளிப்படிப்பை நிறைவுசெய்தார்.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ திருநெல்வேலியிலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் 33ஆவது மாவட்டமாக உருவாக்கப்பட்ட தென்காசி மாவட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் கே. பழனிசாமி தொடங்கிவைத்தார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் காலமான சவுகத் கைபி, எந்த மொழிசார்ந்த புகழ்பெற்ற நடிகையாக இருந்தார்?**



A) மராத்தி

**B) ஹிந்தி ☑**

C) தெலுங்கு

D) கன்னடம்

✓ ஹிந்தி திரையுலகின் பிரபல நடிகையும், ஷபனா ஆஸ்மியின் தாயுமான சவுகத் கைபி (93), நவ.23 அன்று மும்பையில் காலமானார். கைபியின் கணவரான கைபி ஆஸ்மி பிரபல உருது கவிஞரும் திரைப்பட பாடலாசிரியருமாவார். அவரும் அவரது கணவரும் இந்திய பொதுவுடமைக் கட்சியின் (CPI) கலாசார தளங்களாக இருந்த இந்திய மக்கள் நாடக சங்கம் மற்றும் முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் ஆகியவற்றின் முன்னணி நபர்களாக இருந்தனர். ஷாதி அலியின் 'சாதியா' சவுகத் கைபி நடித்த கடைசித் திரைப்படமாகும்.

**2.யாருக்கு 2018ஆம் ஆண்டுக்கான 28ஆவது பீகாரி புரஸ்கார் வழங்கப்பட்டுள்ளது?**



A) விஜய் வர்மா

B) சத்ய நாராயண்

**C) மனிஷா குல்ஷிரேஷ்தா ☑**

D) பகவதி லால் வியாஸ்

✓ இராஜஸ்தானைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரான மனிஷா குல்ஷிரேஷ்தா தனது 'ஸ்வப்னபாஷ்' என்ற புதினத்துக்காக 2018ஆம் ஆண்டிற்கான 28ஆவது 'பீகாரி புரஸ்காரை' பெற்றுள்ளார். இராஜஸ்தானிய வம்சாவளியைச்சேர்ந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் இவ்விருதை KK அறக்கட்டளை வழங்கி வருகிறது. இவ்விருது கடந்த 10 ஆண்டுகளில் வெளியான ஹிந்தி அல்லது இராஜஸ்தானி மொழியைச் சார்ந்த சிறந்த படைப்புக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

✓ பிரபல ஹிந்தி மொழிக் கவிஞரான பீகாரியின் பெயரால் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. ₹2.5 இலட்சம் ரொக்கப்பரிசு, சான்றிதழ் மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றை இவ்விருது கொண்டுள்ளது.

**3.பூகன்வில் (Bougainville) என்பது எந்த நாட்டின் மாகாணமாகும்?**




**A) பப்புவா நியூ கினியா ☑**

B) சாலமன் தீவுகள்

C) பிஜி

D) கிரிபதி

✓ பப்புவா நியூ கினியாவிலிருந்து விடுதலை பெறுவது குறித்த வாக்கெடுப்பில் பூகன்வில் பொதுமக்கள் வாக்களிக்கத் தொடங்கியுள்ளனர். விடுதலை பெறுவதற்கான வாக்குகளைப் பெற்றுவிட்டால், 206,000 மக்கள் தொகையைக்கொண்ட தன்னாட்சி மாகாணம் உலகின் புதிய சுதந்திர நாடாக மாறக்கூடும்.

✓ பூகன்வில் & பப்புவா நியூ கினியா இடையேயான ஓர் உள்நாட்டுப்போரை முடிவுக்குக்கொண்டுவந்த 2001ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஓர் அமைதி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும் இந்த வாக்கெடுப்பு. பப்புவா நியூ கினியாவிலிருந்து அதிக தன்னாட்சி அல்லது முழுமையான விடுதலை என இருவேறு விருப்பங்களை இவ்வாக்கெடுப்பு முன்வைக்கிறது. பூகன்வில் என்பது பசிபிக் தீவுகளின் ஒரு சிறிய தீவுக்கூடமாகும். காலனித்துவ சுரண்டல், விடுதலைக்கான முயற்சிகள், ஒன்பதாண்டுப் போர் மற்றும் படிப்படியான அமைதி செயல்முறை ஆகியவை அதன் வரலாற்றில் அடங்கும்.

**4. வேர்ப்பாலங்கள் (Living Root Bridges) தொடர்புடைய மாநிலம் எது?**

**A) மேகாலயா ☑**

B) திரிபுரா

C) நாகாலாந்து

D) மிசோரம்



✓ வேர்ப்பாலங்கள் (Living Root Bridges) என்பது இந்திய இரப்பர் மரங்களின் வேர்களால் இயற்கையாக பின்னப்பட்டு உருவாக்கப்பட்ட பாலங்களாகும். இவை மேகாலயா மாநிலத்தில் பல தலைமுறைகளாக பாலங்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பல நூற்றாண்டுகளாக கட்டப்பட்ட இந்தப் பாலங்கள் 15 முதல் 25 அடி வரை பரவியுள்ளன. இந்தப் பாலங்கள் முக்கியமாக நீரோடைகள் மற்றும் ஆறுகளைக் கடப்பதற்கான வழியாக உள்ளன. மேலும், அவை உலகப்புகழ்பெற்ற சுற்றுலாத்தலங்களும் ஆகும்.

✓ தற்போது, இக்கட்டமைப்புகளை ஆராய்ந்து, அவற்றை உலகெங்கிலுமுள்ள நவீன கட்டிடக்கலைகளில் புகுத்துவதற்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம், நகரங்களை மேலும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக மாற்றவியலும்.

**5. இலடாக்கிற்கென பனியில் உறையாத சிறப்பு டீசலை வெளியிட்ட எண்ணெய் நிறுவனம் எது?**

A) ஹிந்துஸ்தான் பெட்ரோலியம்

**B) இந்திய எண்ணெய் நிறுவனம் (IOCL) ☑**

C) பாரத் பெட்ரோலிய நிறுவனம்

D) GAIL

इंडियनऑयल
IndianOil

✓ இலடாக், கார்கில், காசா மற்றும் கீலாங் போன்ற நாட்டின் உயரமான பகுதிகளுக்காக பனியில் உறையாத சிறப்பு டீசலை இந்திய எண்ணெய் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தனித்துவமிக்க சிறப்பு டீசலானது மிகக்கடுமையான குளிர்நிலவும் காலநிலையில்கூட உறையாமல் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இதன்மூலம், கடுமையான குளிர்நிலவும் பிராந்தியங்களுக்கு ஆண்டு முழுவதும் எரிபொருள் வழங்க இயலும் மற்றும் இது சாலைப் போக்குவரத்தை விரைவுபடுத்துவதற்கான நாட்டின் முயற்சிகளில் ஓர் ஊக்கியாக செயல்படும். பானிபட் சுத்திகரிப்பு நிலையத்தில் தயாரிக்கப்படும் இந்தச் சிறப்புவாய்ந்த எரிபொருள், –33° செல்சியஸ் குளிர்நிலையில்கூட உறைந்துபோகாது. இது, BS–VI தர டீசலின் BIS கூறுகளையும் பூர்த்திசெய்கிறது.

**6.காமன்வெல்த் இளையோர் நாடாளுமன்றத்தை நடத்தும் மாநில சட்டமன்றம் எது?**

**A) தில்லி ☑**

B) தெலுங்கானா

C) கேரளா

D) பஞ்சாப்



- நவம்பர் 25 தொடங்கி அதற்கடுத்து வரும் மூன்று நாட்களுக்கு, மக்களவையுடன் இணைந்து தில்லி சட்டமன்றமானது காமன்வெல்த் இளையோர் நாடாளுமன்றத்தை நடத்துகிறது. இந்த நிகழ்வில், 24 நாடுகளைச்சேர்ந்த சுமார் 47 பங்கேற்பாளர்கள் பங்கேற்பார்கள்.
- காமன்வெல்த் இளையோர் நாடாளுமன்றம் என்பது காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தால் (Commonwealth Parliamentary Association) நடத்தப்படும் ஓர் ஆண்டுக்கூட்டமாகும். இது, காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த 18 முதல் 29 வயதுடைய இளையோரை ஒருங்கிணைத்து மக்களாட்சி மற்றும் நிர்வாகம் தொடர்பான சிக்கல்கள் குறித்து விவாதிக்கிறது.


**7. "RN Kao: Gentleman Spymaster" என்னும் நூலின் ஆசிரியர் யார்?**

A) S E ஜோஷி

**B) நிதின் A கோகலே ☑**

C) K சங்கரன் நாயர்

D) கிரிஷ் சந்திர சக்சேனா




- "RN Kao: Gentleman Spymaster" என்ற நூலை பாதுகாப்பு வல்லுநர் நிதின் A கோகலே எழுதியுள்ளார். இந்தியாவின் வெளியுறவு புலனாய்வு அமைப்பான Research & Analysis Wing (RAW)இன் நிறுவனத் தந்தையான புகழ்பெற்ற உளவாளி இராமேஸ்வர்நாத் காவின் வாழ்க்கையைப்பற்றி இது கூறுகிறது.
- 1950களின் இடைக்காலத்தில், 'காஷ்மீர் இளவரசி' விசாரணையை நடத்துதல், 1971ஆம் ஆண்டில் வங்கதேச விடுதலையில் அவராற்றிய பங்களிப்புகள் மற்றும் சிக்கிம், இந்தியாவுடன் இணைவதை உறுதிசெய்வதில் அவரின் பங்கு ஆகியவை காவின் புகழ்பெற்ற அருஞ்செயல்களுள் அடங்கும்.

**8.மாநில நாட்டுப்புறக் கலை மன்றத்தை (SFAC) அமைக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) மத்திய பிரதேசம்

B) இராஜஸ்தான்

**C) சத்தீஸ்கர் ☑**

D) உத்தர பிரதேசம்

- ✓ பாரம்பரிய கலை வடிவங்களையும் கலைஞர்களையும் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் மாநில நாட்டுப்புறக்கலை மன்றத்தை அமைப்பதற்கு சத்தீஸ்கர் மாநில அரசு முடிவு செய்துள்ளது. அனைத்து வகையான நாட்டுப்புறக்கலைசார் குழுக்களை பதிவு செய்வதையும், அவற்றைப் பட்டியலிடுவதையும், இசைக்கருவிகள் மற்றும் அவர்களுக்குக் தேவையான பிறபொருட்கள் உள்ளிட்ட சில உதவிகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதையும் இந்த மன்றம் உறுதிசெய்யும்.
- ✓ இது, நவீன விளம்பர ஊடகங்கள் மூலம் மாநிலத்தின் நாட்டுப்புறக் கலைகளை பிரபலப்படுத்தும் மற்றும் தொல்லியல் மற்றும் கலாசார பாரம்பரிய தலங்களில் விழாக்களை ஏற்பாடு செய்யும்.

**9.எட்டாவது சர்வதேச சுற்றுலா சந்தை நடைபெற்ற நகரம் எது?**

**A) இம்பால் ☑**

B) கௌஹாத்தி

C) இடாநகர்

D) கொல்கத்தா




- ✓ நவ.23–25 வரை மணிப்பூர் மாநிலத்தில் உள்ள இம்பாலில், வடகிழக்கு மாநிலங்களுடன் இணைந்து எட்டாவது சர்வதேச சுற்றுலா சந்தையை சுற்றுலா அமைச்சகம் ஏற்பாடுசெய்தது. இந்நிகழ்வு, உள்நாட்டு & பன்னாட்டுச் சந்தைகளில் வடகிழக்குப் பிராந்தியத்தின் சுற்றுலாத்திறனை சிறப்பித்துக் காட்டுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இது, எட்டு வடகிழக்கு மாநிலங்களைச்சேர்ந்த சுற்றுலா தொழிற்துறை சகோதரத்துவத்தையும் தொழில்முனைவோர்களையும் ஒன்றிணைக்கிறது.

**10.ஆக்ஸ்போர்டு அகராதிகள் எந்தச் சொல்லாடலை அதன் 'நடப்பாண்டின் (2019) சொல்' என அறிவித்துள்ளது?**

A) காலநிலை நடவடிக்கை

B) காலநிலை மறுப்பு

C) காலநிலை கவலை

**D) காலநிலை அவசரநிலை (Climate Emergency) ☑**




- ✓ ஆக்ஸ்போர்டு அகராதிகள், "காலநிலை அவசரநிலையை (Climate Emergency)" அதன் "நடப்பாண்டின் (2019) சிறந்த சொல்" என அறிவித்துள்ளது. சுற்றுச்சூழல் குறித்து இறுதித்தேர்வுக்கு தேர்வுசெய்யப்பட்ட

'climate action', 'climate denial eco–anxiety extinction' & 'flight shame' உள்ளிட்ட சொல்லாடல்களில் இருந்து 'climate emergency' என்னும் சொல்லாடல் சிறந்ததாக தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

- ✓ 2018ஆம் ஆண்டில் 'toxic – நச்சு' என்ற சொல்லும், 2017ஆம் ஆண்டில் 'youth–quake' என்ற சொல்லும் அந்தந்த ஆண்டின் சிறந்த சொற்களாக ஆக்ஸ்போர்டு அகராதி அறிவித்தது குறிப்பிடத்தக்கது. எழுதப்பட்ட மில்லியன் கணக்கான ஆங்கிலச் சொற்களைக் கொண்ட தரவுத்தளமான ஆக்ஸ்போர்டு கார்பஸில் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, 2018ஆம் ஆண்டு முதல் 'காலநிலை அவசரநிலை' என்ற சொல்லின் பயன்பாடு நூறுமடங்கு அதிகரித்துள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைகளில் 5% இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) ஹரியானா

B) உத்தர பிரதேசம்

C) பஞ்சாப்

**D) மத்திய பிரதேசம் ☑**

- ✓ தேசிய அளவிலும் பன்னாட்டளவிலும் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைகளில் 5% இடஒதுக்கீடு வழங்க மத்திய பிரதேச மாநில அரசு முடிவுசெய்துள்ளது. நவ.24 அன்று குவாலியரில் உள்ள கம்பூ விளையாட்டு வளாகத்தில் நடந்த 16 வயதுக்குட்பட்ட மாநில அளவிலான ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவின்போது, விளையாட்டு மற்றும் இளையோர் நலத்துறை அமைச்சர் ஜீது பட்வாரி இதனை அறிவித்தார்.
- ✓ அனைத்து CBSE, அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகளும் இந்த ஒலிம்பிக்கில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் அறிவித்தார். இதில் ஹாக்கி, கூடைப்பந்து, கால்பந்து, கைப்பந்து, கபடி, கோ–கோ, தடகளம், மல்யுத்தம், பூப்பந்து மற்றும் டேபிள் டென்னிஸ் ஆகிய 10 விளையாட்டுக்கள் அடங்கும்.


**2.அண்மையில் காலமான கைலாஷ் ஜோஷி, எந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்தார்?**

A) ஹரியானா

B) கர்நாடகா

**C) மத்திய பிரதேசம் ☑**

D) பஞ்சாப்



- ✓ மத்திய பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், பாஜக மூத்த தலைவருமான கைலாஷ் ஜோஷி (91), நவ.24 அன்று போபாலில் காலமானார். அவரது இறுதிச்சடங்குகள், தேவஸ் மாவட்டத்தில் உள்ள அவரது சொந்த ஊரான ஹட்பிபல்யாவில் நடைபெற்றன. கடந்த 1929 ஜூலை 14 அன்று பிறந்த கைலாஷ் ஜோஷி, மத்திய பிரதேச முதலமைச்சராக 1977 முதல் 1978 வரை பதவி வகித்தார். 'அரசியல் துறவி' என்றழைக்கப்பட்ட அவர், எட்டுமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அத்துடன், மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

**3.இளஞ்சிவப்பு பந்துடன் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய பந்துவீச்சாளர் யார்?**

A) முகமது ஷாமி

B) உமேஷ் யாதவ்

**C) இஷாந்த் சர்மா ☑**

D) ஜஸ்பிரீத் பும்ரா



- ✓ கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் வங்கதேசத்துக்கு எதிரான பகல்–இரவு இளஞ் செந்நிற பந்து டெஸ்ட் போட்டியில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை இஷாந்த் சர்மா பெற்றார். முன்னதாக, 1932ஆம் ஆண்டில் லார்ட்ஸில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில், செந்நிற பந்தைக்கொண்டு ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய பந்து வீச்சாளர் முகமது நிசார் ஆவார்.
- ✓ சுவாரஸ்யமாக, தற்போதைய தலைமைப்பயிற்சியாளராக இருக்கும் இரவிசாஸ்திரி, 1991ஆம் ஆண்டில் WACAஇல் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில், வெண்ணிற பந்தைக்கொண்டு ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய பந்துவீச்சாளராக உள்ளார்.

**4. 'பூஞ்ச் இணைவு நாளை'க் கொண்டாடிய இந்திய ஆயுதப்படை எது?**

A) இந்திய வான்படை

B) இந்திய கடற்படை

C) இந்திய கடலோர காவல்படை

**D) இந்திய இராணுவம் ☑**



- ✓ பாகிஸ்தானிய முற்றுகையாளர்களிடமிருந்து எல்லைப்புற மாவட்டத்தை பாதுகாப்பதற்காக 1948ஆம் ஆண்டில் இந்திய இராணுவம் நடத்திய 'ஆபரேஷன் ஈஸி'யை நினைவுகூரும் வகையில், இந்திய இராணுவம் நவ.23 அன்று, வரலாற்றுச் சிறப்புமிக்க 'பூஞ்ச் இணைவு நாளை'க் கொண்டாடியது.
- ✓ 1947 நவம்பரில் இந்திய இராணுவத்தால் பூஞ்ச் விடுவிக்கப்படும் வரை அதனை பாகிஸ்தானியர்கள் முற்றுகையிட்டிருந்தனர். 1948 நவம்பர் 21 அன்று, டன்னா கா பிர் என்ற இடத்தில், இராஜோரியின் படைத்தலைவர் யதுநாத்தின் படைகளுடன் படைத்தலைவர் பிரிதம் சிங்கின் படைகள் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இணைப்பை இந்நாள் குறிக்கிறது.

**5.இந்தியாவின் முதலாவது மிகப்பெரிய உயிரி தொழில்நுட்ப பங்குதாரர்களின் சந்திப்பான 'உலகளாவிய உயிரி–இந்தியா உச்சிமாநாடு–2019' நடைபெற்ற நகரம் எது?**

A) சென்னை

**B) புது தில்லி ☑**

C) புனே

D) கொல்கத்தா



✓ இந்தியாவின் முதலாவது மிகப்பெரிய உயிரி தொழில்நுட்ப பங்குதாரர்களின் சந்திப்பான உலகளாவிய உயிரி–இந்தியா (Global Bio–India) உச்சிமாநாடு, நவ.24 அன்று புது தில்லியில் நடைபெற்றது.

✓ மூன்று நாள் நடைபெறும் இந்த உச்சிமாநாடு இந்தியாவின் உயிரி தொழில்நுட்பத் துறையின் திறனை பன்னாட்டுச் சமூகத்திற்குக் காண்பிப்பதற்கும், உயிரி–மருத்துவம், உயிரி–வேளாண், உயிர்–தொழிற் துறை, உயிரி–ஆற்றல் ஆகிய துறைகள் மற்றும் உயிரி–சேவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் உள்ள முக்கிய சவால்களை அடையாளங்காணவும், அவற்றை கருத்தில் கொள்ளவும் ஒரு நல்வாய்ப்பை வழங்கியது.

**6.யானைக்கால் நோய்க்கு எதிராக நோய்த்தடுப்பு முகாமைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) ஹரியானா

B) கர்நாடகா

**C) உத்தர பிரதேசம் ☑**

D) பஞ்சாப்




✓ உத்தர பிரதேச மாநில அரசு நவ.25 முதல் யானைக்கால் நோய்க்கு (அல்லது பைலேரியா) எதிராக மிகப்பெரிய நோய்த்தடுப்பு முகாமைத் தொடங்கியுள்ளது. இம்முகாமின்கீழ், அறுபத்தைந்தாயிரத்துக்கும் மேற்பட்ட சுகாதார பணியாளர்களைக்கொண்ட குழுக்கள், 19 மாவட்டங்களில், டிச.10 வரை சுமார் 6.5 கோடி குடிமக்களுக்கு மருந்துகளை விநியோகிக்கும். நாட்டில் யானைக்கால் நோயை முற்றிலும் ஒழிப்பதற்கான காலக்கெடுவாக 2021ஆம் ஆண்டை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

**7.நடப்பாண்டின் (2019) ஆகா கான் கட்டிடக்கலை விருதை வென்ற ஆர்கேடியா கல்வித் திட்டம் எந்த நாட்டினுடையதாகும்?**

A) இந்தியா

**B) வங்கதேசம் ☑**

C) நேபாளம்

D) இலங்கை



✓ தத்தாரஸ்தான் குடியரசின் தலைநகரமான கசானில், 'ஆர்கேடியா கல்வித்திட்டம் – The Arcadia Education Project' எனப் பெயரிடப்பட்ட மிதக்கும் பள்ளியானது நடப்பாண்டின் (2019) மதிப்புமிக்க ஆகா கான் கட்டிடக்கலை விருதினை வென்றது. இந்தப் பள்ளி, வங்கதேசத்தின் தெற்கு கானர்சோரில் அமைந்துள்ளது. நாட்டில் விளிம்புநிலையில் உள்ள குழந்தைகளுக்காக மிதக்கும் பள்ளியைக் (Floating School) கட்டுவதற்கான ஒரு புதுமையான திட்டம் இது.

✓ வறண்ட காலங்களில் தரையிலும், மழைக்காலத்தில் நீரில்மூழ்கும்போது மிதக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் பள்ளியை வடிவமைப்பாளர் சைப் உல் ஹக் வடிவமைத்துள்ளார். மூங்கிலை மட்டுமே பயன்படுத்தி கட்டப்பட்டுள்ள இந்தப் பள்ளியின் வடிகால் அமைப்புக்காக மட்டும் சக்கரங்கள் மற்றும் எஃகு உருளைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**8.நடப்பாண்டின் (2019) டேவிஸ் கோப்பை பட்டத்தை வென்ற நாடு எது?**

**A) ஸ்பெயின் ☑**


B) கனடா

C) சுவிச்சர்லாந்து

D) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

✓ மாட்ரிடில் நடைபெற்ற டேவிஸ் கோப்பை இறுதியாட்டத்தில் கனடாவை வீழ்த்தி ஆறாவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது ஸ்பெயின். முதல்நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், கனடாவின் டெனிஸ் ஷாபோலோவை 6–3, 7–6 (9–7) என்ற செட்கணக்கில் வீழ்த்தி 2–0 என்ற கணக்கில் வெற்றியை வசப்படுத்தினார்.

**9. "Finding the Gaps" என்ற தனது நூலை வெளியிட்ட சைமன் டௌபல், எந்த நாட்டின் முன்னாள் கிரிக்கெட் நடுவர்?**




A) தென்னாபிரிக்கா

B) நியூசிலாந்து

**C) ஆஸ்திரேலியா ☑**

D) இலங்கை

✓ ஆஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் நடுவரான சைமன் டௌபல், "Finding the Gaps: Transferable Skills to Be the Best You Can Be" என்ற நூலை எழுதியுள்ளார். துல்லியமான தனது பணிகளுக்காக பெயர்பெற்ற டௌபல், 2012இல் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெறும் வரை வீரர்களிடம் மிகுந்த மரியாதை பெற்றவராக இருந்தார்.

**10.பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

**A) நவம்பர் 25 ☑**

B) நவம்பர் 26

C) நவம்பர் 24

D) நவம்பர் 23

✓ பெண்களுக்கும், சிறுமியர்களுக்கும் எதிரான வன்முறை தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.25 அன்று பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. "Orange the World: Generation Equality Stands Against Rape" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான அதிகாரப்பூர்வ கருப்பொருளாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்தியாவின் 70ஆவது அரசியலமைப்பு நாள் கொண்டாடப்பட்ட தேதி எது?**

A) நவம்பர் 25

**B) நவம்பர் 26 ☑**

C) நவம்பர் 24

D) நவம்பர் 23




✓ 1949ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று அரசியல் சாசனம் நிறைவேற்றப்பட்டதைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அந்நாளன்று தேசிய சட்ட நாள் (அ) அரசியலமைப்பு நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியா விடுதலை அடைந்த பின்னர் கடந்த 1949ஆம் ஆண்டு Dr. B.R அம்பேத்கர் தலைமையில் அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

✓ பின்னர், இந்தியா குடியரசு பெற்ற 1950 ஜனவரி 26 அன்று அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்நிலையில், அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியான நவம்பர் 26ஆம் தேதியை சிறப்பிக்கும் வகையில், 2015ஆம் ஆண்டு முதல் இந்நாள் அரசியலமைப்பு நாளாக ஒவ்வோர் ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 2015இல் இந்நாள் தெரிவு செய்யப்படும்போது Dr. B.R அம்பேத்கரின் 125ஆவது பிறந்தநாளாகும். Dr. B.R அம்பேத்கரின் எண்ணங்களைப் பரப்பவும், அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை பரப்பவும் இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**2.ஊழல் தொடர்பாக புகாரளிப்பதற்காக, '14400' என்னும் உதவி தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**

A) ஹரியானா

B) கர்நாடகா

**C) ஆந்திர பிரதேசம் ☑**

D) பஞ்சாப்



✓ ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சர் Y S ஜெகன்மோகன் ரெட்டி, அண்மையில், '14400' என்ற உதவி தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த உதவி தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலம் அரசாங்கத் துறையில் நடைபெறும் ஊழல் குறித்து பொதுமக்கள் புகாரளிக்கலாம். அனைத்து புகார்களும் 15–30 நாட்களுக்குள் விசாரிக்கப்பட்டு அதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**3. 'மிலன் – 2020' என்ற பன்னாட்டு இராணுவ பயிற்சியை நடத்தவுள்ள இந்திய ஆயுதப்படை எது?**

A) இந்திய வான்படை

**B) இந்திய கடற்படை ☑**

C) இந்திய கடலோர காவல்படை

D) இந்திய இராணுவம்



- ✓ இந்திய கடற்படையானது வரும் 2020 மார்ச் மாதத்தில், விசாகப்பட்டினத்தில், 'மிலன் – 2020' என்ற பன்னாட்டு இராணுவப் பயிற்சியை நடத்தவுள்ளது. இதில் தெற்காசியா, தென்கிழக்காசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 41 நாடுகள் பங்கேற்கும். திறன் மேம்பாடு, கடல்சார் விழிப்புணர்வு, பயிற்சி, நீரமைவு வரைவியல், தொழில்நுட்ப உதவி, செயல்பாட்டு பயிற்சி ஆகியவற்றில் இந்தப் பயிற்சி தனது கவனத்தைச் செலுத்தும்.

**4.அண்மையில் காலமான சுதிர் தார், எந்தத் துறைசார்ந்தவராக இருந்தார்?**

A) ஓவியம்

B) இதழியல்

**C) கேலிச்சித்திரம் ☑**

D) கவிதை



- ✓ பிரபல கேலிச்சித்திரக் கலைஞர் சுதிர் தார் (87), குர்கானில் நவம்பர் 26 அன்று காலமானார். 1961ஆம் ஆண்டு தி ஸ்டேட்ஸ்மென் என்ற ஆங்கில இதழில் கார்ட்டூனிஸ்டாக பணியில் சேர்ந்தார். அதன்பிறகு, 1967ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் டைம்ஸில் தம்மை இணைத்துக்கொண்டு பணிபுரிந்தார். இவரது கேலிச்சித்திரங்கள் தி இண்டிபெண்டன்ட், தி பயனீர், தில்லி டைம்ஸ், நியூயார்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட் மற்றும் சாட்டர்டே ரிவியூ போன்றவற்றிலும் வெளிவந்துள்ளன.

**5.இந்திய இரயில்வே நிதியியல் மேலாண்மை நிறுவனம் அமைக்கப்பட்டுள்ள நகரம் எது?**

A) டேராடூன்

**B) ஹைதராபாத் ☑**

C) புனே

D) பெங்களூரு



- ✓ இரயில்வே நிதியியல் நிர்வாகத்தில் தொழிற்முறை பயிற்சியளிப்பதற்காக தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில், இந்திய இரயில்வே நிதியியல் மேலாண்மை நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நிதியியல் மேலாண்மைத் துறைசார்ந்த நாட்டிலுள்ள முதன்மையான நிறுவனங்களின் பட்டியலில், இந்நிறுவனமும் இணைந்துள்ளது. இந்நிறுவனம், செகந்திராபாத்தில் மௌலா–அலி என்ற இடத்தில் 14 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

**6.குரு காசிதாஸ் தேசிய பூங்காவானது சத்தீஸ்கரின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?**

**A) கோரியா ☑**

B) பிலாஸ்பூர்

C) ஜாஷ்பூர்

D) முங்கேலி



- ✓ கோரியா மாவட்டத்தில் உள்ள குரு காசிதாஸ் தேசிய பூங்காவை புலிகள் காப்பகமாக அறிவிக்க சத்தீஸ்கர் மாநில அரசு முடிவுசெய்துள்ளது. தற்போது, பிஜாப்பூர் மாவட்டத்தில் இந்திராவதி, காரியாபந்த் மாவட்டத்தில் உதந்தி – சீதாநதி & பிலாஸ்பூர் மாவட்டத்தில் அச்சனக்மர் என சத்தீஸ்கர் மாநிலத்தில் ஏற்கனவே மூன்று புலிகள் காப்பகம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**7.சீனாவின் கடன் நடைமுறைகளை அதன் பட்டை மற்றும் பாதை திட்டத்தின்கீழ் கடுமையாக விமர்சித்துள்ள நாடு எது?**

A) இரஷ்யா

**B) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**

C) பிரான்ஸ்

D) இங்கிலாந்து



- ✓ அமெரிக்காவின் உயர்மட்ட தூதரான அலைஸ் வெல்ஸ், சீனாவின் பன்னாட்டு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் கடன் நடைமுறைகளை அதன் பட்டை மற்றும் பாதை திட்டத்தின்கீழ் (Belt and Road Initiative) மிகக்கடுமையாக விமர்சித்துள்ளார். சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தின் வணிக நம்பகத் தன்மை குறித்தும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
- ✓ உலக அளவில் மிகப்பெரிய கடன் வழங்குநராக இருந்தாலும் சீனா அதன் ஒட்டுமொத்த கடன் வழங்கல் குறித்த அறிக்கை எதையும் வழங்கவில்லை. எனவே எந்த ஒரு மதிப்பீட்டு முகமை அல்லது பாரிஸ் கிளப் அல்லது சர்வதேச நாணய நிதியமும் அதன் நிதியியல் பரிவர்த்தனைகளை கண்காணிக்க இயலாது. வெளிப்படைத்தன்மையில்லாதது என்பது வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக சீனாவிடம் கடன்வாங்கிய நாடுகளுக்கு ஏற்படும் அபாயங்களை மறைப்பதற்கான ஒரு வழியாகும்.
- ✓ இது மூலோபாய சொத்துக்களின் சரணடைவுக்கு வழிவகுக்கும். மேலும், அது இறையாண்மையை கேள்விக்குறியாக்கும். இலங்கையில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மாலத்தீவில் உள்ள ஒடுபாதை ஆகியவை கேள்விக்குரிய வணிக நம்பகத்தன்மையின் சீன நிதியுதவித் திட்டங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**8.முன்மொழியப்பட்டுள்ள எட்டலின் நீர்மின் திட்டம் தொடர்புடைய மாநிலம் எது?**

A) ஒடிசா

B) திரிபுரா

C) பஞ்சாப்

**D) அருணாச்சலபிரதேசம் ☑**



- ✓ தற்போதைய சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த மதிப்பீடு முற்றிலும் போதாது எனக்கண்டறியப்பட்டதால், பிறிதொரு நம்பகமான சர்வதேச நிறுவனத்தால் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் முன்மொழியப்பட்ட 3,097 MW உற்பத்தித்திறனுடைய எட்டலின் நீர்மின் திட்டத்துக்கான பல்லுயிர் ஆய்வுக்கு மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது.

- ✓ இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ₹25,296.95 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது மற்றும் 7 ஆண்டுகளில் இதனை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்திட்டத்தை நிறைவேற்று –வதன் மூலம் 2,80,677 மரங்கள் வெட்டப்படுவதோடு, உலகளவில் அழிவில் விளிம்பிலிருக்கும் 6 பாலூட்டிகளின் இருப்பையும் இது அச்சுறுத்தலுக்குள்ளாக்கும்.

- ✓ இப்பகுதியில் 680 வகையான பறவையினங்கள் உள்ளன; அது இந்தியாவில் காணப்படும் மொத்த பறவையினங்களில் 56% ஆகும். மத்திய சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகத்தின் வன ஆலோசனைக் குழுமமும், இமயமலை மண்டலத்தின் உயிரி–புவியியல் கூறுகள் நிறைந்த மாகாணத்தின்கீழ் இத்திட்டம் வருவதால் இதனை எச்சரிக்கையுடன் தொடர அறிவுறுத்தியுள்ளது.

**9.ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் குறைந்தது ஒரு மாற்றுத்திறனாளி உறுப்பினரை நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ள மாநில அமைச்சரவை எது?**

A) உத்தர பிரதேசம்

B) ஒடிசா

C) இராஜஸ்தான்

**D) சத்தீஸ்கர் ☑**

- ✓ 1993ஆம் ஆண்டு மாநில பஞ்சாயத்து இராஜ் சட்டத்தில் திருத்தம் செய்வதன் மூலம், சத்தீஸ்கர் மாநில அமைச்சரவை ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் குறைந்தது ஒரு மாற்றுத்திறனாளி உறுப்பினராவது இருப்பதை கட்டாயமாக்கியுள்ளது. தேர்தல் செயல்முறையின் மூலம் மாற்றுத்திறனாளி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், உறுப்பினர் (ஆண்/பெண்) ஒருவர் பரிந்துரைக்கப்படுவார்.

- ✓ இதன்மூலம், அம்மாநிலத்தில் உள்ள 11,000 மாற்றுத்திறனாளிகள் பஞ்சாயத்தளவில் பிரதிநிதிகளாக இருப்பார்கள். பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கல்வித்தகுதிகளை கைவிடவும் மாநில அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

**10.பின்வரும் எவ்விரு யூனியன் பிரதேசங்களை இணைக்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளது?**

A) புதுச்சேரி மற்றும் இலட்சத்தீவுகள்

**B) டாமன் & டையூ மற்றும் தாத்ரா & நகர் ஹவேலி ☑**

C) அந்தமான் & நிக்கோபர் மற்றும் இலட்சத்தீவுகள்

D) சண்டிகர் மற்றும் தில்லி



- ✓ மத்திய உள்துறை இணையமைச்சர் G கிஷன் ரெட்டி, டாமன் & டையூ மற்றும் தாத்ரா & நகர் ஹவேலி ஆகிய இரண்டு ஒன்றிய பிரதேசங்களை ஒன்றிணைக்கும் மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தார். ஜம்மு மற்றும் காஷ்மீரானது ஜம்மு & காஷ்மீர் மற்றும் இலடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்ட பின்னர் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ✓ தற்போது, ஜம்மு & காஷ்மீர் மற்றும் இலடாக் ஆகியவற்றை யூனியன் பிரதேசங்களாக உருவாக்கிய பின்னர் இந்தியாவில் தற்போது மொத்தம் ஒன்பது யூனியன் பிரதேசங்கள் உள்ளன

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ விழுப்புரத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் 34ஆவது மாவட்டமாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தை தமிழ்நாடு முதலைமைச்சர் பழனிசாமி நவம்பர் 26 அன்று தொடக்கிவைத்தார். கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் ஆட்சியராக கிரண் குராலா நியமிக்கப்பட்டுள்ளார்.
    - கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் ஆகிய 2 வருவாய் கோட்டங்கள், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம், திருக்கோவிலூர், உளுந்தூர் பேட்டை, புதிதாக தோற்றுவிக்கப்படும் கல்வராயன்மலை வட்டம் என மொத்தம் 6 வட்டங்கள் இடம்பெறும்.
- ✓ தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் கடல்மீன்பிடித்தல் ஒழுங்குமுறை சட்டத்தை அமல்படுத்துவதற்–காக கடல்சார் அமலாக்க பிரிவு (Marine Enforcement Wing) என்னும் புதிய பிரிவை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. அதன்படி, காவல்துறை கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில் 112 பணியாளர்–களுடன் இந்தப் புதிய படைப்பிரிவு செயல்படும்.
- ✓ துறைமுக இணைப்புத் திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டம் திருமங்கலத்திலிருந்து கொல்லம் வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 744 (NH 744)ஐ, கொல்லம் துறைமுகத்துடன் இணைக்கும் 3 கி.மீ., தூர சாலையை அகலப்படுத்தும் பணி, பாரத் மாலா பரியோஜனா திட்டத்தின் முதற்கட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.
- ✓ தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் அருகே ஏவுகணை ஏவுதளம் அமைப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ✓ விமானங்களின் புறப்பாடு குறித்த தகவல்களை பயணிகள் உடனுக்குடன் தெரிந்துகொள்வதற்கு வசதியாக செயல்படும் புதிய 'போர்டிங்கேட் மேலாண்மை முறை'யை இந்திய விமான நிலைய ஆணையத்தின் தலைவர் அர்விந்த் சிங், சென்னை விமான நிலையத்தில் தொடக்கிவைத்தார்.
    - இந்தப் புதிய அமைப்பு, விமானத்தில் ஏறுவதற்காக பயணிகள் செல்லும் போர்டிங்கேட்டிலேயே விமானங்கள் புறப்படும் நேரம் உள்ளிட்ட தகவல்களை உடனுக்குடன் அறிவிப்பதற்கு விமான நிலைய ஊழியர்களுக்கு வசதியாக இருக்கும். இதுபோன்ற அமைப்பு இந்திய விமான நிலைய ஆணையத்தின் விமானநிலையங்களில் தமிழ்நாட்டின் சென்னை விமான நிலையத்தில்தான் முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலிலிருந்து (NAAC) A+ தரச்சான்றைப் பெற்றுள்ள மத்திய பிரதேச மாநிலத்தின் முதல் பல்கலைக்கழகம் எது?**

A) ஜிவாஜி பல்கலைக்கழகம்

B) மகாராஜா சத்ராசல் புந்தேல்கண்ட் பல்கலைக்கழகம்

**C) தேவி அகில்யா பல்கலைக்கழகம் ☑**

D) பர்கத்துல்லா பல்கலைக்கழகம்

✓ இந்தூரில் அமைந்துள்ள தேவி அகில்யா பல்கலைக்கழகமானது தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலிலிருந்து A+ தரச்சான்று பெற்ற ம.பி மாநிலத்தின் முதல் பல்கலைக்கழகமாக மாறியுள்ளது. இதன்மூலம் உயர் கற்றல் மையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை இந்தப் பல்கலைக்கழகம் பெறும்.

✓ மேலும், திறந்தநிலை தொலைதூர பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவது உட்பட பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டங்களையும் இந்தப் பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்த இயலும். இந்நிறுவனம், 1964இன் ம.பி மாநிலச் சட்டத்தால் நிறுவப்பட்டதாகும்.

**2.உத்தரபிரதேச மாநில அரசானது தனது முதல் பிணந்தின்னிக்கழுகுக் காப்பகத்தை எந்த மாவட்டத்தில் அமைக்க முடிவுசெய்துள்ளது?**

A) இலக்னோ

B) சீதாப்பூர்

**C) மகராஜ்கஞ்ச் ☑**

D) ரேபரேலி



✓ அழிவின் விளிம்பிலிருக்கும் பிணந்தின்னிக் கழுகுகளைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாக உத்தர பிரதேச மாநிலத்தின் மகராஜ்கஞ்ச் மாவட்டத்தின் பரேண்டா பகுதியில் மாநிலத்தின் முதல் பிணந்தின்–னிக் கழுகுக்காப்பகம் & இனப்பெருக்க மையத்தை அமைக்க உத்தரபிரதேச அரசு முடிவுசெய்துள்ளது. வனவுயிரி ஆராய்ச்சி அமைப்பான பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்துடன் இணைந்து அங்கு இந்தப் புதிய மையம் அமைக்கப்படும்.

✓ பிணந்தின்னிக் கழுகு இனங்களுள் அதிக அச்சுறுத்த நிலையில் உள்ளவற்றைக் கண்டறிந்து அதைக் காப்பதே அம்மையத்தின் முதல் பணியாக இருக்கும். இதன்வகையில், நாட்டிலேயே முதலாவதாக இருக்கும் இந்த மையம், ஹரியானாவின் பிஞ்சூரில் அமைந்துள்ள ஜடாயு பாதுகாப்பு இனப்பெருக்க மையத்தை பின்பற்றி அமைக்கப்படும்.

**3.எந்தத் தேதியில், இந்தியாவில், தேசிய பால் நாள் கொண்டாடப்படுகிறது?**




A) நவம்பர் 29

**B) நவம்பர் 26 ☑**

C) நவம்பர் 27

D) நவம்பர் 28

✓ இந்தியாவின் வெண்மைப்புரட்சியின் தந்தையான Dr. வர்கீஸ் குரியனின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் நவ.26 அன்று தேசிய பால் நாள் கொண்டாடப்படுகிறது. பால் உற்பத்தியில் உலகளவில் ஐம்பதாவது இடத்திலிருந்த இந்தியாவை, சில பத்தாண்டுகளிலேயே மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற்றிய உலகின் மிகப்பெரிய பால் வளர்ச்சித்திட்டமான 'Operation Flood'ஐ உருவாக்கியவர் Dr. வர்கீஸ் குரியன் ஆவார்.

**4.வரவு–இணைக்கப்பட்ட மானிய சேவைகள் ஆவாஸ் தளத்தை (Credit–linked Subsidy Services Awas Portal – CLAP) தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**



**A) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

B) சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

C) வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

D) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, நவ.27 அன்று புது தில்லியில், வரவு–இணைக்கப்பட்ட மானிய சேவைகள் ஆவாஸ் தளத்தைத் தொடங்கிவைத்தார். வரவு – இணைக்கப்பட்ட மானிய சேவைகள், CLSS & பயனாளிகளுக்கு ஒரு வெளிப்படையான, வலுவான, நிகழ்நேர மற்றும் இணைய – அடிப்படையிலான கண்காணிப்பு முறையை இந்தத்தளம் வழங்குகிறது. இத்தளத்தைப் பயன்படுத்துவதன்மூலம் ஒரு பயனாளி தனது விண்ணப்பநிலையை நிகழ்நேரத்தில் (real–time) கண்காணிக்க இயலும்.

**5.நாடுதழுவிய நாக்ரிக் கர்த்தாவ்யா பாலன் அபியானின் ஒருபகுதியாக கர்த்தாவ்யா தளத்தை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**




A) சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்

**B) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ☑**

C) உள்துறை அமைச்சகம்

D) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ 70ஆவது அரசியலமைப்பு நாளை முன்னிட்டு, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான இரமேஷ் போக்ரியால் 'நிஷாங்', நாடுதழுவிய ஆண்டுமுழுவதும் நடைபெறும் நாக்ரிக் கர்த்தாவ்யா பாலன் அபியானின் ஒருபகுதியாக "kartavya.ugc.ac.in" என்ற இணையதளத்தை தொடங்கிவைத்தார்.

மாணவர்களுக்கான மாதாந்திர கட்டுரைப்போட்டிகள், வினாடி–வினாக்கள், விவாதங்கள், சுவரொட்டி தயாரித்தல் உள்ளிட்ட அபியான் தொடர்பான செயல்பாடுகளை இந்த வலைத்தளம் நடத்தும்.

**6. RAeS சமூகத்தின் நடப்பாண்டுக்கான (2019) கௌரவ பெல்லோசிப்பைப்பெற்றுள்ள இந்திய அறிவியலாளர் யார்?**

A) புனித் கோயங்கா

B) K சிவன்

**C)** G சதீஷ் ரெட்டி ☑

D) இராம் சேவக் சர்மா



✓ லண்டனின் ராயல் ஏரோனாட்டிகல் சொசைட்டியின் நடப்பாண்டுக்கான (2019) கௌரவ பெல்லோசிப் விருது, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் செயலாளரும் DRDOஇன் தலைவருமான G சதீஷ் ரெட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த நூறு ஆண்டுகளில் இந்த மதிப்புமிக்க விருதைப்பெறும் முதல் இந்தியராக G சதீஷ் ரெட்டி உள்ளார்.

✓ RAeSஇன் இந்த கௌரவ பெல்லோஷிப் என்பது விண்வெளி தொழிற்துறையில் மிகச்சிறந்த பங்களிப்பு –களுக்கு மட்டுமே வழங்கப்படும் விண்வெளி சாதனைக்கான உலகின் மிகவுயர்ந்த கௌரவங்களுள் ஒன்றாகும். இது விண்வெளித் துறையில் நோபல் பரிசுக்கு சமமானதாக கருதப்படுகிறது.

**7.அண்மைய CRY அறிக்கையின்படி, சிறார்களுக்கு எதிரான அனைத்துக் குற்றங்களிலும் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?**

**A)** உத்தரபிரதேசம் ☑

B) பஞ்சாப்

C) ஹரியானா

D) ஒடிசா

CHILD RIGHTS AND YOU
www.cry.org

✓ ஈராண்டுகளுக்குப் பிறகு தேசிய குற்றப்பதிவு பணியகத்தால் அக்டோபர் 21 அன்று வெளியிடப்பட்ட 2016–17ஆம் ஆண்டிற்கான தரவுகளின் அடிப்படையில், Child Relief&You (CRY) ஆனது "இந்தியாவில் குற்றங்களால் சிறார்கள் எவ்வளவு பாதிக்கப்படுகின்றனர்?" என்ற தலைப்பில் தனது அண்மைய அறிக்கையை வெளியிட்டது.

✓ குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களானது ஒட்டுமொத்த குற்றங்களின் எண்ணிக்கையைவிட 20% அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்த குற்றங்கள் 3.6% அதிகரித்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கையின்படி, 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகளுடன் மொத்த சதவீதத்தில் 14.8 சதவீதத்தைப் பெற்று, குழந்தைகளுக்கு எதிரான ஒட்டுமொத்த குற்றங்களுக்கான மாநிலங்களின் பட்டியலில் உத்தர பிரதேசம் மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளன. சிறார்களுக்கு எதிரான குற்றங்களின் அதிகரிப்பு 73.9% ஆக ஜார்கண்டில் காணப்படுகிறது. 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மணிப்பூரில் இது 18.7 சதவீதமாக குறைந்துள்ளது.

**8.அண்மையில் காலமான நடிகர் பாலாசிங், எந்தப் பிராந்திய திரையுலகில் புகழ்பெற்ற நடிகராக இருந்தார்?**

**A) தமிழ் ☑**

B) மராத்தி

C) ஒடியா

D) தெலுங்கு



✓ தமிழ்த்திரையுலகின் பிரபல நடிகரும் நாடகக்கலைஞருமான பாலாசிங் (67), நவம்பர் 27 அன்று சென்னையில் காலமானார். கமலஹாசன் இயக்கிய, 'விருமாண்டி' மற்றும் நடிகர் தனுஷ் நடித்த, 'புதுப் பேட்டை' உள்ளிட்டவை இவரது நடிப்பில் வெளிவந்த குறிப்பிடத்தக்க திரைப்படங்களுள் அடங்கும். இவரது நடிப்பில் கடைசியாக வெளிவந்த திரைப்படம் 'மகாமுனி'.

**9.அண்மையில் காலமான மது ஷெட்டி, எந்தப் பத்திரிகைக்கழகத்தின் நிறுவன உறுப்பினராக இருந்தார்?**

A) கொல்கத்தா பிரஸ் கிளப்

**B) மும்பை பிரஸ் கிளப் ☑**

C) பிரஸ் கிளப் ஆப் இந்தியா

D) சென்னை பிரஸ் கிளப்



✓ மூத்த பத்திரிகையாளரும் ஆர்வலருமான மது ஷெட்டி (89), நவ.27 அன்று மும்பையில் காலமானார். இவர், மும்பை பிரஸ் கிளப்பின் நிறுவன உறுப்பினராவார். மும்பை மாநகராட்சியில் முன்னாள் உறுப்பினராக இருந்த அவர் சம்யுக்தா மகாராஷ்டிரா & கோவா விடுதலை இயக்கங்களில் பங்கேற்றார்.

**10.குற்றங்கள் குறித்து பொதுமக்களை எச்சரிப்பதற்காக 'சக்தி' என்ற திட்டத்தைத் தொடங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) கேரளா

B) உத்தரபிரதேசம்

C) இராஜஸ்தான்

**D) மத்தியபிரதேசம் ☑**




✓ கடத்தல் போன்ற குற்றங்கள் குறித்து குறுஞ்செய்தி (SMS) மூலம் பொதுமக்களை எச்சரிக்கும் விதமாக, 'சக்தி' என்ற திட்டத்தைத் தொடங்குவதற்கு மத்தியபிரதேச மாநில அரசு முடிவுசெய்துள்ளது. இத்தகைய குற்றங்களைத் தடுப்பதற்கும் அவற்றுக்குத் தீர்வுகாண்பதற்கும் இந்த முறை உதவும்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. ஊழல் தடுப்பு அமைப்பான, 'லோக்பால்'இன் இலச்சினையை வடிவமைத்தவர் யார்?**

A) நிகில் குமார்

B) பிரசாந்த் மிஸ்ரா ☑

C) கனோன் கிருஷ்ணா

D) நாராயணன் கிருஷ்ணசாமி

✓ லோக்பால் அமைப்பின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி பினாக்கி சந்திரகோஷ், லோக்பால் குழுவின் இலச்சினை மற்றும் குறிக்கோள் வாசகத்தை வெளியிட்டார். உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் வசித்துவரும் பிரசாந்த் மிஸ்ராவால் இந்த இலச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இலச்சினையில் இடம்பெற்றுள்ள நீதிபதிகளின் அமர்வு, மூன்று மக்களின் உருவம், அசோகச்சக்கரம், ஆரஞ்சு நிற சட்டப் புத்தகம், தனிப்பட்ட சமநிலையுடன் கூடிய 2 கைகள் ஆகியவை லோக்பால் அமைப்பின் பெயருக்கேற்ப மக்களைப் பாராமரிப்பவர் என்பதை பல்வேறு வகைகளில் குறிக்கும் வகையில் உள்ளது.

✓ "யாருடைய செல்வத்திற்கும் பேராசை கொள்ளாதீர்" என்ற அர்த்தங்கொண்ட சமற்கிருத வாசகம் (மா கிரிதா கஸ்யஸ்விதானம்) லோக்பாலுக்கான குறிக்கோளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**2. 2019-2022ஆம் ஆண்டுக்கான SAARC நாடுகளுக்கான செலாவணி பரிமாற்ற வணிக (currency swap) ஏற்பாட்டின் கட்டமைப்பை திருத்தியமைத்துள்ள இந்திய அமைப்பு எது?**

A) நிதி அமைச்சகம்

**B)** இந்திய ரிசர்வ் வங்கி ☑

C) SEBI

D) IRDA




✓ 2019-2022ஆம் ஆண்டிற்கான தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு (SAARC) நாடுகளின் செலாவணி பரிமாற்ற வணிக ஏற்பாடு குறித்த கட்டமைப்பை இந்திய ரிசர்வ் வங்கி திருத்தியுள்ளது. 2019-22ஆம் ஆண்டுக்கான கட்டமைப்பின்கீழ், இந்திய ரிசர்வ் வங்கியானது $2 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற ஒட்டுமொத்த அளவுக்குள்ளான செலாவணி பரிமாற்ற வணிக ஏற்பாட்டை தொடர்ந்து வழங்கும்.

✓ அமெரிக்க டாலர் ($), யூரோ (€) அல்லது இந்திய ரூபாயில் (₹) பணத்தை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இக்கட்டமைப்பானது நவம்பர் 14, 2019 முதல் நவம்பர் 13, 2022 வரை செல்லுபடியாகும். இருதரப்பு செலாவணி பரிமாற்ற வணிக ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் அனைத்து SAARC உறுப்புநாடுகளுக்கும் இவ்வசதி கிடைக்கப்பெறும். ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் SAARC நாடுகளாகும்.

**3.தொலையுணர் செயற்கைக்கோளான (Remote Sensing Satellite) கார்டோசாட்–3ஐ அதன் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்திய ஏவுகணை எது?**

A) PSLV–44

B) PSLV–49

C) PSLV–48

**D) PSLV–47 ☑**



- ✓ PSLV–47 ஏவுகணை மூலம், ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் SHARஇல் இருந்து சூரியவிணக்க சுற்றுப்பாதையில் (Sun–Synchronous Orbit) இந்தியாவின் அண்மைய புவி கண்காணிப்பு தொலையுணர் செயற்கைக்கோளான கார்டோசாட்–3ஐ இந்திய விண்வெளி ஆய்வு மையம் வெற்றிகரமாக ஏவியது.
- ✓ இந்த கார்ட்டோசாட்–3 செயற்கைக்கோள் ஒரு மேம்படுத்தப்பட்ட வகை செயற்கைக்கோளாகும். இது துல்லியமாக படங்களை அனுப்பும் திறன்கொண்டதாகும். இதுதவிர, அமெரிக்காவின் 13 செயற்கைக் கோள்களும் அதற்கென நியமிக்கப்பட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டன. இந்திய விண்வெளி ஆய்வுமையத்தின் (ISRO) வணிகப்பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா லிட் உடனான வணிக ஏற்பாட்டின் கீழ் இந்தச் செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டுள்ளன.

**4. 47ஆவது அகில இந்திய காவலர் அறிவியல் மாநாட்டை ஏற்பாடுசெய்த மாநிலக் காவற்துறை எது?**

A) பஞ்சாப்

B) மத்திய பிரதேசம்

**C) உத்தர பிரதேசம் ☑**

D) இராஜஸ்தான்

- ✓ புதுச்சேரியின் துணைநிலை ஆளுநரும் ஓய்வுபெற்ற IPS அதிகாரியுமான கிரண்பேடி உத்தரபிரதேச மாநிலம் இலக்னோவில் உள்ள காவல்துறை தலைமையகத்தில், 47ஆவது அகில இந்திய காவலர் அறிவியல் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். உத்தரபிரதேச மாநிலக் காவல்துறையானது உள்துறை அமைச்சகம் மற்றும் காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகத்துடன் இணைந்து இந்த 2 நாள் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.
- ✓ இந்நிகழ்வின்போது, ஆறு கருப்பொருள்களின்கீழ் கலந்துரையாடல்கள் நடந்தன. அதில், காவல்துறை சீர்திருத்தங்கள், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் சமூக ஊடகங்களின் பங்கு மற்றும் காவல்துறை அதிகாரிகளின் சரியான அணுகுமுறைகளை ஊக்குவித்தல் போன்ற சில சமகால பிரச்சனைகளும் அடங்கும்.

**5.வரைவு தேசிய விளையாட்டுக் குறியீட்டை மதிப்பாய்வு செய்யும் வல்லுநர் குழுவின் தலைவர் யார்?**

A) சுதான்ஷூ மிட்டல்

B) B P பைஷ்யா

C) அதில் மரிவாலா

**D) முகுந்தகம் சர்மா ☑**



- ✓ வரைவு தேசிய விளையாட்டுக் குறியீட்டை மதிப்பாய்வு செய்வதற்காக முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி முகுந்தகம் சர்மா தலைமையில் 13 பேர் கொண்ட வல்லுநர் குழுவை இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் அமைத்துள்ளது. அனைத்துத் தரப்பினரும் விளையாட்டு குறியீடு ஏற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இது வெளிப்படைத்தன்மை & தன்னாட்சிக்கு நேரெதிராக தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளின் தன்னாட்சிக்கு இடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்த முயற்சிக்கும்.

**6. "Hemant Karkare: A Daughters Memoir" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

A) S H கான்

B) பகத் குப்தா

C) அஜய் சிங்

**D) ஜூய் நவரே (Jui Navare) ☑**



- ✓ "Hemant Karkare: A Daughters Memoir" என்ற நூலை பயங்கரவாத தடுப்புப்படையின் முன்னாள் தலைவரான ஹேமந்த் கர்கரேவின் மகள் ஜூய் கர்கரே நவரே எழுதியுள்ளார். தனது மகளுக்கு தந்தையாக ஹேமந்த் கர்காரேவின் வாழ்க்கையை இந்நூல் விவரிக்கிறது.
- ✓ பாகிஸ்தானிய ISI ஆதரவுடைய பயங்கரவாதிகளால், 2008 நவம்பர் 26 அன்று மும்பையில் ஹேமந்த் கர்கரே சுட்டுக்கொல்லப்பட்டார். அவரோடு, '26/11' பயங்கரவாத தாக்குதல்களின்போது பாதுகாப்புப் படையினைச் சேர்ந்த பதினெட்டுபேர் உயிரிழந்தனர்.

**7.கத்துவா குறித்த செய்தி வழங்கலுக்காக, இதழியல் துறையில் சிறந்து விளங்குவதற்காக வழங்கப்படும், 'IPI இந்தியா' விருதை நடப்பாண்டில் (2019) வென்ற இந்திய செய்தி அலைவரிசை எது?**

**A) NDTV இந்தியா ☑**

B) நியூஸ் 7 தமிழ்


C) புதிய தலைமுறை

D) சன் நியூஸ்

✓ கத்துவா பாலியல் வன்புணர்வு & கொலைவழக்கு விசாரணை மற்றும் அரசியல் பாசாங்குத்தனத்தை வலுவாக அம்பலப்படுத்தியதற்காக, இதழியல் துறையில் சிறந்து விளங்குவதற்காக வழங்கப்படும், 'IPI இந்தியா' விருதை நடப்பாண்டில் (2019) NDTV செய்தி அலைவரிசை வென்றுள்ளது. இதனை மூத்த இதழாளர் நிதி ரஸ்தான் தொகுத்து வழங்கினார்.

✓ பன்னாட்டுப் பத்திரிகை நிறுவனத்தின் (IPI) இந்திய பிரிவானது செய்தித்தாள்கள், இதழ்கள் மற்றும் செய்திநிறுவனங்களின் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள் மற்றும் மூத்த நிர்வாகிகளின் மன்றமாகும்; இவர்கள் அனைவரும் இதன் உறுப்பினர்களாவர்.

**8.அண்மையில் காலமான கிளைவ் ஜேம்ஸ், எந்த நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் மற்றும் ஒலிபரப்பாளராக இருந்தார்?**



A) தென்னாப்பிரிக்கா

**B) ஆஸ்திரேலியா ☑**

C) பிரான்ஸ்

D) அமெரிக்கா

✓ ஆஸ்திரேலிய எழுத்தாளரும் ஒலிபரப்பாளருமான கிளைவ் ஜேம்ஸ் (80), நவம்பர் 24 அன்று ஐக்கிய பேரரசின் (UK) கேம்பிரிட்ஜில் காலமானார். 1939இல் பிறந்த இவர், 1961இல் இங்கிலாந்துக்குச் சென்று இலக்கிய விமர்சகராகவும் தொலைக்காட்சி கட்டுரையாளராகவும் முக்கியத்துவம் பெற்றார்.

**9.பத்தாவது CMS VATAVARAN சுற்றுச்சூழல் & வனவுயிரி திரைப்பட விழாவின் கருப்பொருள் என்ன?**




A) இந்திய கிராமங்களை கொண்டாடுதல்

B) கங்கையைக் கொண்டாடுதல்

C) இந்திய வனவுயிரிகளைக் கொண்டாடுதல்

**D) இமயமலையைக் கொண்டாடுதல் (Celebrating Himalayas) ☑**

✓ 4 நாள் நீடித்த சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் ஊடக ஆய்வுகள் மையம் (CMS) VATAVARAN–2019 ஆகியவற்றின் குறும்படப்போட்டி மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான விழாவானது புது தில்லியில் நடந்தது. சுற்றுச்சூழல் & வனவுயிரிகள் மற்றும் CMS VATAVARANஇன் பத்தாவது பதிப்போடு பிரத்தியேகமாக இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

✓ திருவிழாவின் இப்பதிப்பு, நடப்பு காலநிலை மாற்றம் குறித்த உரையாடல்கள் மற்றும் செயல்பாடுகளில் மலைப்பாங்கான சுற்றுச்சூழலமைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்கான முயற்சியாக "இமயமலையைக் கொண்டாடுதல்" என்ற கருப்பொருளில் கவனம் செலுத்துகிறது.

**10. ₹10 இலட்சம் கோடி சந்தை மதிப்பீட்டு மதிப்பை எட்டிய முதல் இந்திய நிறுவனம் எது?**

A) இந்துஸ்தான் யூனிலீவர்

B) HDFC வங்கி

**C) ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் ☑**

D) TCS

- ✓ முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீசின் (RIL) பங்குவிலை அதிகரித்ததைத் தொடர்ந்து, சந்தை மூலதனத்தில் ₹10 இலட்சம் கோடியை எட்டிய முதல் இந்திய நிறுவனமாக அது மாறியுள்ளது. எண்ணெய்–முதல்–தொலைத்தொடர்பு வரை கொண்டுள்ள இந்தக்கூட்டு நிறுவனத்தின் சந்தை மூலதனம், BSEஇல், காலை வர்த்தகத்தின்போது ₹10.02 இலட்சம் கோடியாக உயர்ந்தது.
- ✓ ₹7,79,708.02 கோடி சந்தை மதிப்பீட்டைக்கொண்ட இந்தியாவின் இரண்டாவது மிக மதிப்புவாய்ந்த நிறுவனமாக TCS உள்ளது, அதைத்தொடர்ந்து HDFC வங்கி, ஹிந்துஸ்தான் யூனிலீவர் மற்றும் HDFC ஆகிய நிறுவனங்கள் உள்ளன. நிறுவனங்களின் சந்தை மூலதன புள்ளிவிவரங்களானது பங்கு விலை இயக்கத்துடன் தினமும் மாறுகின்றன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ வேலூர் மாவட்டத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் முப்பத்தைந்தாவது மாவட்டமாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி நவ.28 அன்று தொடக்கிவைத்தார்.
- ✓ வேலூர் மாவட்டத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் முப்பத்தாறாவது மாவட்டமாக உருவாக்கப்பட்ட ராணிப்பேட்டை மாவட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி நவ.28 அன்று தொடக்கிவைத்தார்.
- ✓ காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் முப்பத்தேழாவது மாவட்டமாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி நவ.29 அன்று தொடக்கிவைத்தார்.
- ✓ தமிழ்நாட்டில் மின்சார இணைப்புகளை வலுப்படுத்துவதற்கான $451 மில்லியன் அமெரிக்க டாலர் கடனொப்பந்தத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியும் இந்தியாவும் கையெழுத்திட்டன. சென்னை – கன்னியாகுமரி தொழிலியல் இணைப்புத்திட்டத்தின் தெற்கு மற்றும் வடக்குப்பகுதிகளில் மின்சார இணைப்பை இது வலுப்படுத்தும்.
- ✓ அரக்கோணத்தில் உள்ள கடற்படை விமான நிலையமான இராஜாளியில் 93ஆவது ஹெலிகாப்டர் பயிற்சி நிறைவைக்குறிக்கும் அணிவகுப்பு நவ.29 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இந்திய கடற்படையைச் சேர்ந்த 9 பைலட்களுக்கு பெருமைமிகு 'பொன்னிறக்கை' எனப்பொருள்படும் 'Wings of Gold' விருதுகள் வழங்கப்பட்டன.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.பாங்காக்கில் நடைபெற்ற 21ஆவது ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியின் பெண்கள் தனிநபர் 'ரீகர்வ் – Recurve' நிகழ்வில், தங்கம் வென்ற இந்திய வீராங்கனை யார்?**



A) நிஷா ராணி தத்தா

B) திரிஷா தேப்

C) அங்கிதா பகத்

**D) தீபிகா குமாரி ☑**

✓ பாங்காக்கில் நடந்த 21ஆவது ஆசிய சாம்பியன்ஷிப்பின் பெண்கள் தனிநபர் 'ரீகர்வ்' நிகழ்வில், இந்திய வீராங்கனை தீபிகா குமாரி தங்கப்பதக்கம் வென்றார். இறுதிப்போட்டியில், சகநாட்டு வீராங்கனையான அங்கிதா பகத்தை 6–0 என்ற புள்ளிக்கணக்கில் தீபிகா தோற்கடித்தார். முன்னதாக, இருவரும், இந்த நிகழ்வின் அரையிறுதிக்குள் நுழைந்து, நாட்டிற்கான தனிநபர் ஒலிம்பிக் ஒதுக்கீட்டைப் பெற்றனர்.

**2. 2023ஆம் ஆண்டில் ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பையை நடத்தும் நகரம் எது?**




A) ஜெய்ப்பூர்

B) புது தில்லி

**C) புவனேசுவரம் ☑**

D) குவாலியர்

✓ 2023ஆம் ஆண்டு ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பைப் போட்டியானது ஜனவரி 13 முதல் 29 வரை புவனேசுவரம் மற்றும் ரூர்கேலாவில் நடைபெறவுள்ளது. ஒரு நாடு, ஒரு விளையாட்டின் உலகக் கோப்பைப் போட்டியை தொடர்ச்சியாக நடத்துவது இதுவே முதன்முறையாகும்; அதிலும், ஒரே நகரம் தொடர்ச்சியாக இருமுறை போட்டியை நடத்துவது இதில் இன்னும் சிறப்புப் பெறுகிறது.

✓ இருப்பினும், இம்முறை, புவனேசுவரம் (2018ஆம் ஆண்டு உலகக்கோப்பைப் போட்டியை நடத்தியது) ரூர்கேலாவில் உள்ள பிஜு பட்நாயக் ஹாக்கி அரங்கத்துடன் போட்டியை நடத்தும் உரிமைகளைப் பகிர்ந்துகொள்ளும்.

**3.அண்மையில் காலமான பிராட் கோப்ரைட், எந்த நாட்டைச் சேர்ந்த உலகப்புகழ்பெற்ற மலையேற்ற வீரராவார்?**



A) ஜெர்மனி

**B) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**

C) பிரான்ஸ்

D) இரஷ்யா

- ✓ உலகப்புகழ்பெற்ற அமெரிக்க மலையேற்ற வீரரான பிராட் கோப்ரைட், நவம்பர் 29 அன்று வடக்கு மெக்ஸிகோவில் ஒரு பாறையில் ஏறும்போது இடறிவிழுந்து இறந்தார். கயிறுகள் ஏதும் இல்லாமல் ஈர்ப்பு விசையை மீறி மலையேற்றம் மேற்கொள்வதற்காக அவர் மிகவும் பிரபலமாக அறியப்பட்டார்.

**4.சர்வதேச காலநிலை & சுற்றுச்சூழல் அவசரநிலையை அறிவித்துள்ள சர்வதேச அமைப்பு எது?**

**A) ஐரோப்பிய ஒன்றியம் ☑**

B) SAARC

C) உலக சுகாதார அமைப்பு

D) BRICS

- ✓ ஐரோப்பிய ஒன்றியமானது (EU) சர்வதேச காலநிலை மாற்றம் சுற்றுச்சூழல் அவசரநிலையை ஓர் அடையாள நடவடிக்கையாக அண்மையில் அறிவித்தது. இது எதிர்வரும் ஐரோப்பிய ஆணையத்தின் காலநிலை மாற்றம் குறித்து வலுவான நிலைப்பாட்டை எடுப்பதற்கு அழுத்தம் தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எதிர்வரும் ஐ.நா COP25 காலநிலை உச்சிமாநாடு குறித்த ஐரோப்பிய நாடாளுமன்ற விவாதத்தின்போது ஸ்ட்ராஸ்பர்க்கில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ✓ இவ்வுச்சிமாநாடு டிசம்பர் 2 அன்று மாட்ரிட்டில் தொடங்குகிறது. 2050ஆம் ஆண்டுக்குள் கரியமிலவாயு ($CO_2$) உமிழ்வை 55% அளவுக்கு குறைப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்தத் தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது.

**5.தமிழ்நாட்டின் மாதிரியில் நுண் உரம்–செயலாக்க மையத்தை (Micro Composting Centre) அமைக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

**A) ஒடிசா ☑**

B) பஞ்சாப்

C) மத்திய பிரதேசம்

D) இராஜஸ்தான்



- ✓ ஒடிசா மாநில அரசு தனது 'ஸ்வச்சா ஒடிசா சுஸ்தா ஒடிசா' பரப்புரையின் ஒருபகுதியாக, ஈரக்கழிவுகளை முறையாக பிரித்து நிர்வகிப்பதற்காக தமிழ்நாட்டைப்பின்பற்றி நுண் உரம்–செயலாக்க மையத்தை அமைப்பதற்கு முடிவுசெய்துள்ளது. விரைவான நகரமயமாக்கலின் காரணமாக திடக்கழிவு மேலாண் –மையானது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பெருஞ்சிக்கலாக உள்ளது.

**6.பொதுவிடங்களில் வெளிப்புற உடற்பயிற்சிக் கூடங்களை அமைப்பதற்கு முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) இராஜஸ்தான்

B) ஒடிசா

C) உத்தர பிரதேசம்

**D) ஹிமாச்சல பிரதேசம் ☑**



- 'கட்டுடல் இந்தியா' இயக்கத்துடன் மக்களை இணைக்கும் ஒருமுயற்சியாக பொது இடங்களில் நவீன வெளிப்புற உடற்பயிற்சிக் கூடங்களை அமைப்பதற்கு ஹிமாச்சல பிரதேச அரசு முடிவுசெய்துள்ளது மாநில அரசின் இம்முயற்சியின் ஒருபகுதியாக தரமசாலாவில் இதற்கென அடையாளங்காணப்பட்டுள்ள பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு உபகரணங்கள் மற்றும் நவீன வெளிப்புற உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.
- 'கட்டுடல் இந்தியா' இயக்கம் என்பது பொதுமக்களின் அன்றாட வாழ்வில் உடற்பயிற்சிகள் மற்றும் விளையாட்டுகளைச் சேர்ப்பதன்மூலம் அவர்களை நலம்மிக்கவர்களாக இருக்கவைக்கும் ஒரு நாடு தழுவிய முயற்சியாகும். இதனை தேசிய விளையாட்டுகள் நாளன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புது தில்லியில் வைத்து தொடங்கிவைத்தார்.


**7.எந்த IITஐச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், காந்திபீடியாவை உருவாக்க முடிவுசெய்துள்ளனர்?**

A) ஐஐடி கான்பூர்

B) ஐஐடி தில்லி

C) ஐஐடி இந்தூர்

**D) ஐஐடி கரக்பூர் ☑**



- 'மகாத்மா' காந்தியின் 150ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'காந்திபீடியா'வை உருவாக்க இரண்டு IITகளும் (IIT காந்திநகர் மற்றும் IIT கரக்பூர்) தேசிய அறிவியல் அருங்காட்சியக கவுன்சிலும் கைகோர்த்துள்ளன. 'காந்திபீடியா' என்பது மகாத்மா காந்தி எழுதிய நூல்கள், கடிதங்கள் மற்றும் உரைகளின் இணையவழிக் களஞ்சியமாகும். மகாத்மா காந்தியின் கடிதங்கள் & உரைகள் போன்ற சுமார் நூறு படைப்புகள் இந்தத்தளத்தில் பதிவேற்றப்படும். முழுக்க முழுக்க செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் இந்த முழு திட்டமும் நிறைவேற்றப்படவுள்ளது.

**8.நடப்பாண்டின் (2019) சர்வதேச பண்ணுறவாண்மை (diplomacy) குறியீட்டில் இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

A) 64ஆவது

B) 25ஆவது

C) 5ஆவது

**D) 12ஆவது ☑**

12

- சிட்னியைச்சேர்ந்த லோயி (Lowy) நிறுவனம் வெளியிட்டுள்ள நடப்பாண்டுக்கான (2019) சர்வதேச பண்ணுறவாண்மை குறியீட்டில் 61 நாடுகளுள் இந்தியா 12ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 2019ஆம் ஆண்டு நிலவரப்படி, புது தில்லியில் 123 தூதரகங்கள் மற்றும் உயராணையங்கள் உள்ளன.
- இந்த அட்டவணை அண்மைய புள்ளிவிவரங்களை அளிப்பதோடு உலகின் பண்ணுறவாண்மை வலையமைப்புகள் எவ்வாறு விரிவடைகின்றன என்பதையும் சிலவேளைகளில் அவை சுருங்குகின்ற –ன என்பதையும் குறிக்கிறது. இது, உலகெங்குமுள்ள நாடுகளால் பராமரிக்கப்படும் தூதரகங்களின்

எண்ணிக்கையின் பகுப்பாய்வு ஆகும். இந்தக் குறியீட்டின்படி, சீனா, அமெரிக்காவை முந்திக்கொண்டு உலகின் மிகப்பெரிய பண்ணுறவாண்மை வலையமைப்பாக மாறியுள்ளது.

**9.குலசேகரப்பட்டினம் அருகே ஏவுகணை ஏவுதளத்தை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் குலசேகரப்பட்டினம் அமைந்துள்ளது?**

A) சேலம்

B) திருநெல்வேலி

**C) தூத்துக்குடி ☑**

D) நாகப்பட்டினம்



✓ தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் அருகே புதிய ஏவுகணை ஏவுதளத்தை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வாடிக்கையாளர்களுக்காக இந்தியாவிலிருந்து ஏவுகணை ஏவுதல்கள் அதிகரித்து வருவதன் பின்னணியில் இந்த வளர்ச்சி வருகிறது. தற்போது, அனைத்து GSLV மற்றும் PSLV ஏவுகணைகளும் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு மையத்துக்குச் (ISRO) சொந்தமான இரண்டு ஏவுதளங்களிலிருந்து ஏவப்பட்டு வருகின்றன.

**10.பெண் தொழில்முனைவோர்களால் நடத்தப்படும் தேசிய இயற்கை உணவுத் திருவிழாவை நடத்துவதற்காக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டமைச்சகத்துடன் இணைந்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) ஜல் சக்தி அமைச்சகம்

B) சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம்

**C) உணவுப்பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் ☑**

D) சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்




✓ மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவை, பெண் தொழில்முனைவோர்களால் நடத்தப்படும் தேசிய இயற்கை உணவுத் திருவிழாவை நடத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

✓ மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழுள்ள ஒரு கல்விநிறுவனமான NIFTEM (உணவு தொழில்நுட்ப தொழிற்சாலை மற்றும் நிர்வாகத்திற்கான தேசியக் கல்விக்கழகம்) மூலம் இந்நிகழ்வு திட்டமிடப்பட்டு நடத்தப்படும். இதன்மூலம், இந்தியாவில் இயற்கை வேளாண் உற்பத்தி அதிகரிக்கும்; வாங்குவோருக்கும், விவசாயிகள் மற்றும் இந்திய மகளிர் தொழில்முனைவோருக்கும் இணைப்பு ஏற்படுவதால் நிதிசார்ந்த வலு ஏற்படும்.